ஓ
தத் சத்.

சொரூப தர்ப்பணம்.

(புருடார்த்த பஞ்சகமும் அடங்கியது.)

இது

திருவருணையின்கண்

மெய்ஞ்ஞான சூரியனாய் விளங்கும்

ஸ்ரீரமணமஹர்ஷியவர்களின்

திருவடித்தொண்டர்

அ. நடேசமுதலியாரால்

இயற்றப்பட்டு,

அனந்தபுரம்

N. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

1929.

முகவுரை.

ஆழிசூ ழுலகில் நிலவும் ஆருயிர்களி லாறறிவெய்திய வான்மாக்களுக்கு மெய்யுணர் வளிக்கத்தக்க, அரியபெரிய வேதாந்த சித்தாந்த கிரந்தங்கள் இந்நாள் கணக்கில்லாது மலிந்து விளங்குகின்றன வெனினும், பெரும்பான்மை செய்யுள்வடிவாகவும் சிறுபான்மை கடினமான வசனநடை யாகவுமிருத்தலால் திருந்திய கல்வி, கேள்விகளையுடைய மிகச்சிலர்க்கே அவைபோதிய சகாயங்களாம்.

ஐயக விருளைநீக்க வானக வருக்கனென்றே போது மானதாயிருத்தல் போன்று மிகச்சுருக்கமாகவும், எளிய வசனநடையிலும், அறியாமையாகிய விருளைக்களையு மறிவென்னுஞ் சொரூப ப்ரகாசத்தைத் தெளிவாய்க் காட்ட வல்ல ஞானக்கண்ணுடியாகவுமுள்ள "சொரூபதர்ப்பணம்" என்ற இச்சிறுநூலொன்றே பந்த நிவிருத்தியையும் முத்தி ப்ராப்தி யையுங்கோரு மெவ்வதிகாரிகட்கும் சகலவஞ்ஞான, சந்தேக,விபரீதங்களையும் போக்கி யெதார்த்த (சொரூப) நிலையினைவிளக்குதற்குப் போதுமானதென்பது எனது சுவானுபவ பூர்வத் துணிபாம்.

இங்ஙனம்,
ஸ்ரீ ரமணபக்தன்
N. S. கிருஷ்ணஸ்வாமி.

சிறப்புப்பாயிரம்.

அருணாசல நிவாஸ
ப்ரஹ்மஸ்ரீ, ஈஸ்வர சுவாமிகள்
அருளியது.

குறள்வெண்பா.

தர்ப்பணத்திற் காணுந்தன் சாயை சுயசொரூப
தர்ப்பணத்திற் காணுந் தனை.

திருவண்ணாமலை
ஸ்ரீமத், ஈசான்னிய தேசிகர் மடாலயத் ததிபதிகளான
ஸ்ரீலஸ்ரீ, நடேச சுவாமிகள்
அருளியது.

எழுசீர் விருத்தம்.

இருங்கட லுடுத்த பெருந்தண்மா ஞாலத்
திறந்தமா மலருடை யெவர்க்கும்
பெருங்கடல் வடிவாம் பிரமபோ தகமென்
பீடுடைச் சொரூபதர்ப் பணத்தைப்
பொருங்கட விடும்பை தணந்துபே ரின்பம்
புணர்வுறப் புனைந்துதந் தனனு
லருங்கட னெனவே பெரும்பா மாய்ந்த
வறிஞனு நடனபூ பதியே.

ஓ

ஸ்ரீ சற்குருதுணை.

சொரூப தர்ப்பணம்.

பாயிரம்.

குறள்வெண்பா.

ஆக்கலா தித்தொழில்க ளாற்றியுந்தா னேர்சிறிதுந்
தாக்கிலா தேய்நிறைவே சார்பு.

நூல்.

சகோதரர்களே! சகோதரிகளே! ஆஹா!! பெறற்கரிய மானிடம் பெற்றும் வாணாட்களை யெல்லாம் வீணைக்கழிக்க நமதறியாமையு மிருந்தவாறென்னே!!!

அந்தோ! வீண்படுத்த வொருவழியிலா! வாணாட்களை வாணாட்களாகவே கழித்தற்கான மார்க்கமோ வென்று மியல்பாயுள்ள வொன்றேயாம். இவைமுறையே அசத்திய, சத்திய மார்க்கங்க ளெனப்படும்.

தன்னை யின்னா னெனத் தேர்ந்து, அங்ஙனமே சற்றும் மாறாதிருந்து நடத்தும் வாழ்க்கையே மெய்வாழ்க்கை யென்றும், அங்ஙனமில்லாதது பொய்வாழ்க்கையென்றும் சொல்லப்படும்.

உலர்ந்ததோர் மரத்துண்டை யொத்ததும், சத்த தாதுக்களாலானதுமான வித்தேகத்தையே தன்வடிவென் றுகருதி, இருவினைகள் வாயிலாய் புண்ணிய பாபங்களையும் அவற்றின் துவாரா பிறப் பிறப்புக்களையு மடைந்து, இன்ப துன்பங்களை நுகர்ந்து, பவசாகரத்தினின்று மீளும் வகை யறியாது தத்தளிக்குந் தேகியாகிய தான், தேகத்தினின்றும்

வேருனவன் என்றறிவதே, தன்னை யின்னுனென்று தெளிவதாம். எப்போதும் எல்லாவுயிரினிடத்தும் விளங்கி நிரந்தரம் சுபாவமாகவே "நான், நான்" என்ற ஞானத்தோடு பிரகாசித்துக் கொண்டிருப்பது இத்தேகியே யாம்.

ப்ரஹ்மம், ஆன்மா, சொரூபம், சைதன்யம், பரம்பொருள், சத்து, இருதயம், புருடன், வஸ்து, கடவுளென்பதாதிய பல மொழிகட்கும் பொருள் இத்தேகத்தின்கண் பொருந்தி யிதனை யியக்கும் படியான வித் "தேகி" யென்பதேயாம்.

இத்தகைய தேகி, இயல்பாகவே சச்சிதாநந்த ஸ்வரூபமாகவுள்ள தன் னெதார்த்தத்தினைமறந்து, "தேகபாவம்" கொள்ளுமவசரத்தையே மாயை, மனம், அஞ்ஞானம், ப்ரக்ருதி, திரை, மலம், ஆசை, கிரந்தி, பந்தம், சூக்குமதேகம், சீவன், அகந்தை, பாசமென்பதாதிய சொற்களின் பொருள் விளக்குகின்றதாம்.

தானல்லாத "தேகமேதான்" என்னுமிப் பிராந்தி நீங்கி, தன்னை "தேகி" யென்றறிந்த அவசரத்தையே புருடவிவேகம், மெய்யுணர்வு, ஆன்மஞானம், தத்துவவிளக்கமென்பதாதிய வாக்கியங்களின் பொருளுணர்த்துவதாம்.

பொதுவாகத் தன்னியல்பினை மறந்த தேகியை (சொருபத்தை) யே "ஜீவன்" என்றும் அதன் சலனங்களையே கரணேந்திரிய வியாபாரங்க ளென்றும் சொல்லப்படும்.

கன்மம், பத்தி, யோகம், ஞானம், கற்றல், கேட்டல், சிந்தித்தல், சத்சங்கம், குருகுலவாசம், அன்பர்பணி யென்பதாதிய முயற்சிகள்யாவு மித்தெளிவோடு முடிகின்றனவாம். இத்தெளிவைத்தரா முயற்சிகளெத்தகைய வுயரிய நெறியவேனும் அவற்ரு லொருபோதும் பவப்பிணிதீராதென்பது திண்ணம்.

மறந்த பண்டம் நினைத்துணர்தலென்னும் ஓர்வழியால் மட்டுமே கிட்டுவதுபோல, தன்னை மறந்த ஜீவனும் "ஆராய்ச்சி" யொன்றினாலேயே தன்னை "சொரூபம்" என்றறியக் கூடுமேயல்லாற் பிறமார்க்கங்களாற் கூடாவாம். எனினும் ஏனைய சன்மார்க்கங்களனைத்தும், இவ்வாராய்வுக்கான பரிபாகநிலையினைக் காலக்கிரமத்தி லளித்தற்குரியனவே.

எண்ணறும் பிறவிக்கு வித்தாய், அனாதியாய் வந்து கொண்டிருக்குமிவ் வஞ்ஞானமென்னும் பேரிருளை நல்ல விவேகிகளாவோர் ஆன்மானான்ம விசாரணையா லெய்தற் பாலதான தெளிவென்னும் பிரகாசத்தா லொரேகணத்திற் போக்கடித்தலுங்கூடும்.

"நான்" என்ற வுணர்வின்பொருள் "சொரூபமே" யென் றறிந்ததாகியவித் "தெளிவு" என்பது விசாரிக்குந் தன்மையதாகிய புத்தியின் நிச்சயமேயாம். இந்நிச்சயத்தினாலேயே பந்தநிவர்த்தியடைதல்கூடாது. நிச்சயித்தவண்ணமே சொப் பனாவத்தையிலும் மனதின்தருமங்களாகிய பரிணாமங்களுக்கு அதாவது வாசனாவடிவமான (பந்தஹேதுவான) விஷய சங்கற்பங்களுக்குச் சற்றுமிடந்தாராது நிரந்தரம் அறிவாவே (சுத்தசத்வகுண வடிவாவே) பிரகாசிக்க முயலவேண்டும். எதார்த்தமான வித் "தவத்தை" யே யல்லான்மற்றெச் செயல் களுமங்குவேண்டாவாம். ஸ்ரீராமர், சுகர், அர்ச்சுனர், பரீக்ஷித்து முதலிய ப்ரஹ்ம வித்துக்கள் தம்மை "ப்ரஹ்மஸ்வரூபம்" என்று விசாரித்துணர்ந்தபின்னரக்கணமே சகல சந்தேக விபரீதங்களையும், சோகமோகங்களையுந் தவிர்த்து சித்தவிசிராந்தி (உபசாந்தம்) அடைந்து இடையறாது தெளிந்த அவ்வடிவாவே சும்மாவிருந்தனரே யொழிய வேறெவ்வகை நெறியினுமொழுகினதாய்த் தெரியவில்லை யென்பதே யிங்கு போதியசான்றும்.

தத்துவ விசாரணையாற் சந்தேகமறத்தன்னை "சொரூபம்" என்றறிந்தடையுந் திடநிச்சயத்தையே "பரோட்ச ஞான"மென்றும், அதன் மாறுவநுபூதியையே "அபரோட்ச ஞான" மென்றுஞ் சொல்லப்படும்.

வாசனையை யன்றி விருத்திகளும், விருத்திகளையன்றி மனமும், மனதையன்றி மாயையும், மாயையையன்றி அஞ்ஞானமும், அஞ்ஞானத்தையன்றி சீவனுமின்மையால் ஆசையைமுற்றுந் தொலைத்தலையன்றி மனோநாசம், சித்தநிரோதம், மலநீக்கம், தன்னிழப்பு, அகப்புறக்கரண தண்ட மென்பதாதிய வாக்கியங்கட்குப் பொருள்வேறின்றாம். சொரூபநிலையென்பது நிராசையைத் தவிர்த்தின்றாம்.

ஜீவத்தன்மையால் விளையு மந்நியஞானங்களை யறவே தவிர்த்து, தன்னறிவாவே (சொரூப ஞானமயமாவே) விளங்கு நிலையில் நிலைத்துஇரசோ, தமோகுணங்களாற்றோன்றும் நாமரூபத்தோற்ற வியாபாரங்களைத் தலையெடுக்க வொட்டாது தடுத்து நிற்கும் நிட்களங்கமான ஸ்படிகம் போன்ற மனதினியல்பான நிலையே அருள்நிலை, ஞானநிலை, விவேகநிலை, போதநிலை, ஆநந்தநிலை, சுகநிலை, துரியநிலை, தன்னைத்தரிசிக்குநிலை, சஹஜ நிர்விகற்பநிலை, ஜீவன்முத்திநிலை, சிதம்பரம், சிதாகாசம், சிற்சோதி, பரவெளி, சொரூபப்பிரகாசம், அகண்டாகார விருத்தி யென்பதாதிய வாக்கியங்கட்குப் பொருளாம். மற்றும் அருட்பார்வை, ஞானப்பார்வை, திருக்த்ருஷ்டி, சத்திநிபாதவிவேக விளக்கம், இருவினையொப்பு மலபரிபாகம், சாதனசம்பத்துக்களின் பிராப்தி, திருவடிதீக்ஷை யென்பதாதிய வாக்கியங்களு மிச்சுவானுபவ நிலையினையே குறிப்பனவாம். பட்டினத்தடிகள் "தாய்" என்னுஞ் சொல்லால் விளக்கியது மிவ்விளக்கநிலையினையேயாம்.

சொரூப ஞானம், சொரூபவிளக்கம், சொரூபாநந்தம், சொரூபாநுபவ மென்பதாதிய திருவாக்கியங்களில்வரும் ஞானம், விளக்கம், ஆநந்தம், அநுபவமென்பதாதிய பதங்களின் பொருளாகிய நெருப்பின் சுடுந்தன்மைபோன்ற சொரூபத்தின் தன்மையாகிய சித்தும் அனன்னியமாய் (தன்னையறியுமறிவுந் தன்னிலொடுங்கி) தான் (சொரூப) மாத்திரமாய் விளங்குநிலையே துரியாதீதம், சுகாதீதம், ஆனந்தாதீதம், இன்பாதீதம், நனுச்சுழுத்தி, தலைவன்றரிசனம், மோனம், சொரூபசாட்சாத்காரம், கேவல நிர்விகற்பம், விதேகமுத்தி யென்பதாதிய வாக்கியங்கட்குப் பொருளாம். பட்டினத்தடிகள் "தாதை" யென்ற சொல்லால் விளக்கிய திந்நிலையினையேயாம்.

ஜீவன்முத்தி, விதேகமுத்தி நிலைகளுக்குள் பேதங்கற்பிப்பதும், விதேகமுத்தி நிலையிலேயே தேகம் நழுவப்பெற்றார்க்கே மோட்சப்ராப்தியாகுமென்பதும் சுவாநுபவமின்மையால் விளையும் மயக்கத்தினாலேயாம்.

சுத்த சத்வகுணமா மருணிலையே ஜீவன் முத்தி நிலையாகலானும், ஞானிகளின் மனமாகிய விதனையே ப்ரஹ்மஸ்வரூப மெனச் சுருதிகள் துணிவாயுரைத்தலானும், இந்நிலையிலேயே சொரூப சாட்சாத்காரம் சித்திக்கின்றமையானும் இரண்டாகக்கூறு மம்முத்திநிலைகளிற் சிறிதும் பேதமின்றாம்.

எது ஞானமென்று சொல்லப்படுகிறதோ அச்சொரூப விளக்கமானது நிடப்படுமேல் எத்தகைய விவகார வேளையிலும் அது ஜீவத்தன்மையைச் சற்றுமடைவதின்றாம். இவ்விவகாரங்கள்யாவும் அருட்சத்தியின் தொழில்களாம். இந்நிலையிற்றான் சித்திகளும் வாய்க்கின்றன. இங்கெக் கோரிக்கைகளுமில்லை. தோன்றுமேல் வீணுவதுமில்லை. இவ்விளக்கம் சொரூபத்தைவிட வேறன்றாம். தோற்ற மாத்திரத்தாற் பாமரர்களைப்போன்று வ்யவகாரங்களைப்புரியினுந்

தன்னிலையினின்றும் சற்றும் நழுவுதலற்ற விந்நிலையினையே "எத்தொழிலைச்செய்தாலு மேதவத்தைப்பட்டாலு முத்தர் மனமிருக்கு மோனத்தே ****"என்ற சுவாநுபவ வாக்கானது விளக்குவதாம். இங்கு "மோனம்" என்பதற்கு எவ்வித சங்கற்பாதி சலனங்களுமற்ற நிலை யென்பது பொருளாகாது. தேகேந்திரிய சலனங்களிருந்துந் தன்னை விடாநிலையென் பதே பொருளாம். ஆனல் இத்தகைய வுண்மைகள் பலவும் சுவாநுபூதியால் மட்டுமே தெளியத்தக்கனவாம்.

நிர்விடயமான விவ்வருணிலையினையே மஹான்களெல்லாம் கண், கரமாதியவற்றால் குறிப்பாயுணர்த்துகின்றனர். மெய்ஞ்ஞான தீக்ஷையாகிய வொப்பற்ற "ஓர் மொழி" யென்பது இம்மோனநிலையைத் தவிர்த்தின்றும்.

பட்டினத்தடிகளும், தாயுமானுரும் தத்தம் அருட்குருமூர்த்திகள் தத்தமக்கு அனுக்ரஹித்ததாய் முறையேகூறும் "வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க், கேட்டாத புட்ப மிறையாததீர்த்த மினிமுடிந்து, கட்டாதலிங்கம் கருதாத நெஞ்சம் கருத்தினுள்ளே, முட்டாதபூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே." "பந்தமறு மெய்ஞ்ஞான மானமோனப் பண்போன்றை யருளி *****" என்ற திருவாக்குகளும் முற்கூறிய கருத்தினையே மன்மமா யறிவிக்கின்றனவாம்.

அன்றியும் "உன்னையுணர், சங்கற்பமூலத்தைக்காண், அருளாலெலவையும்பார், திருசியநோக்கைத்தவிர், பஹிர்முக நாட்டத்தைநீக்கு, எல்லாவற்றையும் சொரூபமாகவேபார், பேதபுத்தியையகற்று, ஆசையையறு, ஜீவபாவத்தைக்கெடு, வாசனையையொழி, அகந்தையைக்கொல், பூரணனாய்நில், சும்மாவிரு" என்பதாதிய வுபதேசமொழிகளனைத்தும் இம் "மோனநிலை" யொன்றினையே குறிப்பனவாம்.

"வாசஞக்ஷயமேமுத்தி" யென்ற சுவானுபவக்கருத்தை எத்தனை நூற்களெத்தனை வாக்கியங்களால் விளக்கினலும் அத்தனையுஞ் சொன்மாத்திரத்தல்லாற் பொருளிற் சிறிதும் பேதந்தருவதின்ரும். யாவரேனும் நுண்ணறிவாற் கூர்ந்து நோக்காவிடத்து சத்த சத்துக்களினுண்மைத் தத்துவம் விளங்காது அவை பிரமிக்கத்தான்செய்யும்.

ஸ்ரீராமர், சுகர், சனகாதியர், அர்ச்சுனராதிய அவதார மூர்த்திகளும், தவமுடையோருமான மானவ சிரேட்டர்க்கே வஸ்து நிச்சயந்தோன்ருது முதலிற் சிறிது மயக்கம் நிகழ்ந்ததென்ருல் புருடார்த்தம் (சொரூபசாட்சாத்காரம்) பெற விரும்பிமுயலு மேனைய வெல்லோர்க்குமே முறைப்படி செய்யும் தத்துவ விசாரணையாற் பெறத்தகும் நித்தியாநித்திய வஸ்து விவேகம் திடப்படுகிற (பூரணமாகிற) வரையில் மெய்ஞ்ஞான மென்பதும்; துக்க நிவிருத்தி சுகப்ராப்தியென்பதும்; சொரூபாநுபவ, சொரூப சாட்சாத்கார மென்பதும்; பேரின்ப, மோக்ஷ நிலைகளென்பதும் எந்தவுலகத்தில், எவ்வளவு தூரத்தில், என்ன லக்ஷணத்திலுள்ளனவோ! அச்சென்மசாபல்யமென்னு மொப்பறும் பேற்றினையடையப் பாவியேமாகிய நமக்கு மிச்சென்மத்திலருகத்வமுண்டோ! நாம்தான் சுத்த அஞ்ஞானியாயிற்றே; நமக்கிதுகாறு மென்ன முயன்றும் மனவொடுக்கஞ் சிறிதும் வாய்க்கவில்லையே; மஹா வாக்கியங்களின் பொருளும், மஹான்களுடையவும் சுருதிகளினுடையவும் போதனைகளின் நுட்பமு மங்கைக் கனியாய்த் தெற்றெனத்தோன்றவில்லையே; மறைகளும் பெரியோர்களுங் கூறும் சத்துக்களனுபவங்களிலொன்றேனும் நம்பாலின்றளவும் பொருந்தி யிருக்கக் கண்டிலமேயென்பதாதிய பிரமைகளாரம்பத்தி லொவ்வோர்சமயந் தோன்றி மனச்சோர்வையு மயக்கத்தையுந் தருவது சஹஜமே. என்

ருலும் திடவைராக்கியத்தோடுகூடிய நிரந்தர விசாரத்தாற் சகல சந்தேகங்களேயும் போக்கி "சொரூபதரிசனம்" பெறலே விவேகிக ளென்போர்க் கழகாம்.

ஞானம்வே றஞ்ஞானம்வே றென்று நினைத்தலைவிட அறியாமை யென்பது வேறின்ரும். தத்துவதரிசனத்தி லிவ் விரண்டு ஞானங்களுமே யின்றென்பது துணிபாம். சொரூ பத்தின்றன்மையாகிய சித்தா (அறிவா) னது தான் சொரூ பத்தினும் வேறன்றென்ற தன்னுண்மையினை யெப்போதறி யுமோ அவ்வறிவுக் கப்பருவத்தில் "மேய்ஞ்ஞானம்" எனவும் இயல்பினைமறந் தன்னிய வாகாரத்தை (ஜீவத்தன்மையை) யடையும்போது அதே யறிவுக் கப்பருவத்தில் 'அஞ்ஞானம்' என்றும் பெயர்களே யொழிய உண்மையி லஞ்ஞானத்தை யொழிந்து மெய்ஞ்ஞானமும் மெய்ஞ்ஞானத்தையொழிந் தஞ்ஞானமு மில்லவேயில்லை. இவ்வெதார்த்த முணர்ந்து, உணர்ந்த அவ்வுணர்வு (தன்ஞானமு) மற்று, தாஞக (சொரூப ஸ்வபாவமாகவே) விளங்கும்போது அங்கிவ்விரு ஞானங்களுமேது?

"நீ தேடும் வஸ்து நீயாகவேயிருக்கிறதல்லால் உன்னிலும் அதுவேருகவின்ரும்." என்றுசப்திக்கும் மறைவாக்கும் குரு வாக்கும் மேற்கூறிய வுண்மையினையே முடிவாய்க் கூறுகின் றன. இதனை யின்னும் விளக்கக்கூடுமேல் "பந்தத்தவிர்ப் பையும் முத்தி ப்ராப்தியையும் விரும்புவதெதுவோ; சுருதிக ளின் சாரங்களை யறிவதெதுவோ; நன்மை தீமைகளைப்பகுத் தறிவதெதுவோ; சுழுத்தி கலைந்தபின் "நான்" என்றனு பவத்தோ டுதிப்பதெதுவோ; கண்டேன், உண்டேன், இருந் தேன், கிடந்தேன், சென்றேன் வந்தேன், சுகித்தேன், துக் கித்தேன், அறிந்தேன், அறியேனென்பதாதிய நிகழ்ச்சிகளை தேகத்தளவே தன்னளவாய்க்கொண்ட ஜீவத்தன்மையா லறிவதெதுவோ; இவண்பேசுவதும் பேசக்கேட்டாராய்வது

மெதுவோ" அதனைத்தவிர்த்து சொரூபமென்பது வேறாக வின்றாம், என்று தான் கூறலாம். 'பிணம்' என்ற பெயர் சொரூப சாந்நித்திய மில்லாவுடற்கேயாம்.

சிலமிகும் பழஞ்சமயமாம் சைவசமயமானது சமண சமய வெழுச்சியாற் குன்றிமறையுஞ் சமயத்துதித்த திரு ஞானசம்மந்தர், வாகீசரெனவும்; உண்மையற்ற பற்பல வெவ்வேறு கொள்கைகளையுடைய பொய்மதங்கள் பல தோன்றித் தலையெடுத்ததா லொப்பற்ற அத்துவிதமத மிறந் துபடுஞ் சமயத்துதித்த சங்கரபகவத் பாதாசாரியரெனவும்; சொரூப சாட்சாத்கார நிலையினையுள்ளபடியே காட்டும் பொருட்டாக் கல்லாலடியிற் றக்கிணாமூர்த்தியாய் விளங்கிய மாசற்ற மெய்ஞ்ஞானஸ்வரூபமானது அந்நாளனுக்ரஹித்த வெதார்த்த சின்முத்திரை மோனக்குறிப்பென்னும் ஞான தீக்ஷாமார்க்கம் பற்பல போலிமார்க்கங்களான் மங்குஞ் சம யத்துதித்த மஹாபுருஷரும், திருக்கண்ணாலெப்போதும் மோனநிலையை யுணர்த்துகின்றவரும், கடையேனையொத்த வேழ்மையர்களையும் புனிதமாக்குங் கருணையங்கடலுமான பகவான் "ஸ்ரீரமணமஹரிஷிகள்" ஸ்ரீரமணகீதை இரண் டாமத்தியாயத்து முன்னிரு சுலோகவடிவா யருளியுள்ள "இத்தேகத்தை யிருப்பிடமாகக்கொண்டு ஹிருதய குகை யின்கண் பரப்ரஹ்மவஸ்துவானது,சதா 'நான் , நான்'என்று ஆன்மஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்றதல்லவா!"என்றவருண் மொழிகளும், மற்றும் கீர்த்தனைவடிவாயருளியுள்ள ஆன்ம வித்தையின் பல்லவி யநுபல்லவிகளான "ஐயே யதிசுலபம் ஆன்மவித்தை ஐயேயதிசுலபம். நோய்யார் தமக்கு முளங் கையா மலகக்கனி பொய்யா யொழியமிகு மெய்யா யுளதான்மா" என்ற திருமொழிகளும்,எல்லோர்க்கும் சொரூபநிலையைக் கையிலுற் சுட்டிக்காட்டுவதுபோன்று மிகத்தெளிவாய் விளக்குகின்ற மை இங்கு கவனிக்கத்தக்கதாம். இதற்குமேல் மற்றும் வெ

ளிப்படையாய் சொரூபத்தை நிதரிசனப்படுத்தற் கியலா வாம்.

சுருதிகளனைத்தும் கண்ணாடிக்கொப்பாம். கண்ணாடி தனக்கெதிர்ப்பட்டோன் முகத்தை யஃதுள்ளவாறேதெளிவுறக்காட்டும். யாதாமோர் சந்தர்ப்பத்தில் பேதமாகவுங்காட்டுமெனின் அது திருட்டியின் தோடமேயன்றிக் கண்ணாடியின் தோடமன்று. அங்ஙனமே எத்தனைகோடி நூற்களெத்தனை கோப்பியமான வுண்மைகளை யறிவிக்கின்றனவெனினும், தன்னை யறிந்தோன் அத்தனைக்கும் பொருள் தன்னைத் தவிர்த்தின்றெனவே சுவானுபவநிடத்தால் நிச்சயமாகத் தேர்வன். அங்ஙனந்தோராதவரையில் நூலாராய்ச்சியின் காலமெல்லாம் வீணாவதோடு அது பந்தஹேதுவான வாசனாத்ரயங்களி லொன்றாகவுமுடிகிறதாம். அறிவின் விளக்கத்திற் கேற்ப நூற்கருத்தும் விளங்குமாம்.

சுருங்கக்கூறில் தன்னைமறந்ததே பந்தம். அறிந்ததே முத்தி. மந்தபுத்தியுடையோர்க்குச் சொரூபதரிசனம் எவ்வளவுக்கெவ்வளவு தூரமும் கடினமுமாகுமோ, நுட்பபுத்தியுடையோர்க்கு அவ்வளவுக்கவ்வளவு சமீபமு மெளிதுமாகும்.

உயிர்களனைத்தும் ஸ்வரூப சக்தியே யாதலானும், அஃதெல்லோர்க்கும் பிரத்தியட்ச தரிசனமாயிருத்தலானும், சுருதிகளெல்லா மிவ்வுண்மையினையே முழக்கலானும் இச்சிறு நூலின்பொருளை நிச்சயித்தற்கு வேறுபிரமாணங்கள் வேண்டுவதின்றாம்.

வாழ்த்து.

குறள்வெண்பா.

எம்முதலிங் கென்னையுங்கொண் டெஞ்சுமென்று மன்னநிறை
யம்முதலி ருந்திருந் தாங்கு.

ஸ்ரீ ரமணார்ப்பணம்.

சுபம்.

ஓ

ஸ்ரீசற்குருதுணை.

புருடார்த்த பஞ்சகம்.

மங்கலம்.

குறள்வெண்பா.

தன்மையின்றி மற்றிரண்டுந் தாமிலதாற் றன்மையுமில்
தன்மயமா நிற்பதுவே சார்பு.

நூல்.

எண்சீர்விருத்தம்.

ஓஹோஹோ விந்தையொன்றிங் கோதக் கேண்மி
னூமையனேன் கண்டகனா வுரைப்ப தாகும்
ஆஹாஹா நன்றுநன்றீ ததனை நன்று
யறைந்திடற்கு மாமோவென் றையம் வேண்டா
போகாத விடமென்றும் போகே லென்னும்
பொன்மொழியைக் கேட்டிருந்தும் புன்மை யேனன்
சாகாத நிலையருளுந் தக்கா னென்றே
தண்ணருணை ரமணனடி சார்ந்த தோடம். 1.

தோடவிளை வினையதெனச் சொல்லப் போமோ
சோகமெனும் பொருளிலறத் தோய்வ தல்லால்
பீடமையென் பொருளனைத்தும் பிடுங்கிப் பெட்பாற்
பின்னும்விடா தெனைத்தொடர்ந்திங் கினிதாய்ப் பேணுங்
கூடதனை யென்றனொடுங் கொள்ளை கொண்டான்
கூச்சலிடா வகைசிறிதுங் கொன்றே சூதாய்
நாடதிலெங் கேனுமிங்ங னடந்த துண்டோ
நவபுருடற் கண்டதுண்டோ நவின்றாற் போலும். 2.

நவிலரும்பே றனைத்துநிறை நலத்தி னுன்கா
 ணயவஞ்சக் கள்வனலா னசையொன் றில்லான்
புவியுயிர்கொள் கொலைஞனலான் புகழார் நாமம்
 பொலிவடிவா தியவிருந்து மில்லாப் பூன்றன்
கவினுடலோ டவத்தைதொறுங் கலந்தொன் றுயோர்
 கணக்கிலடங் காக்காலங் களித்து வாழென்
நவிரமிசை யொருதரந்தன் னற்றுட் சூட்டி
 நானறத்தா ளுனதிற நவில்வா ரியாரே. 3.

யாரேனு மிறந்துபட்ட வநுப வங்கண்
 டறையினதி சயந்தானஃ தறியார்க் குச்சூழ்
காரேறு மலக்கவசங் கழன்ற தல்லாற்
 காணலொடு மறைதலிங்கோர் காலு மில்லை
தீரேதற் றிருந்தவென்றன் சிறைக்கட் டெல்லாந்
 தீர்ந்தவடி யோடுகடைச் சென்ம மீதா
யோரேழ்தா துடலாதி யிருந்து மில்லா
 துள்ளதுவா யமைந்ததலோ வுண்மை வாழ்வாம். 4.

வாழ்வெனிற்பின் றாழ்வுமுண்டென் வழக்கிங் காமோ
 வாழ்வறிவு மற்றதிரம் வழுத்தொ ணுதே
வூழ்வடிவா மூடற்குமெனக் கிருந்த தோர்கட்
 டொழிந்துமெடுத் துலகநெறி யொழுகி வாழு
மேழ்மை யன்றோ விவ்வுரைக்கு மிடமா யிற்றுங்
 கிருந்தெழிற்கண் ணுவுணர்த்து மியன்மோ னத்தா
டாழ்நெறிகாட் டிருங்கருணைக் காங்கைம் மாறென்
 றறியேன்மற் றடங்கலொழிந் தருளு மாறே. 5.

வாழ்த்து.

குறள்வெண்பா.

ஞாலம் பொருந்தியமெய்ஞ் ஞானநிலை வாழ்வித்த
சீலன்றாள் வாழ்க தினம்.

ஸ்ரீரமண சற்குருபகவான் சேவடிவாழ்க.

சுபம்.



